


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY

சென்னை மலர்: 01 இதழ்: 118 10.12.2025 புதன்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 118 | Wednesday | pages 8 | Rs.5/-

LOCAL NEWS ,EVENTS & ADS - JOB, PROPERTY, HOUSEHOLD, EDUCATION - CHENNAI

## இன்றைய நாள்

புதன்கிழமை
(10–12–2025)
விசுவாவசு ஆண்டு,
கார்த்திகை–24
பிறை: தேய்பிறை
திதி
சஷ்டி இரவு 7.58 வரை
பிறகு சப்தமி.
நட்சத்திரம்:
ஆயில்யம் காலை 8.36 வரை
பிறகு மகம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00 – 1.30 மணி.
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி.
சூலம் –வடக்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | ஆர்வம் |
| மிதுனம் | ஜெயம் |
| கடகம் | தனம் |
| சிம்மம் | போட்டி |
| கன்னி | சலனம் |
| துலாம் | அமைதி |
| விருச்சிகம் | அசதி |
| தனுசு | ஆதரவு |
| மகரம் | செலவு |
| கும்பம் | வரவு |
| மீனம் | சிறப்பு |

# நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் பதவிநீக்க தீர்மானம்: இந்தியா கூட்டணி சமர்ப்பிப்பு!

## பிரதமர் மோடி



**புதுடில்லி,டிச,10:** மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் கார்த்திகை தீபத்தன்று தீபம் ஏற்ற உத்தரவிடக் கோரி ஹிந்து அமைப்பினர் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீபத்தூணில் தீபம் ஏற்ற கோயில் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார்.

ஆனால், வழக்கமாக ஏற்றப்படும் உச்சி பிள்ளையார் கோயில் அருகே மட்டும் தீபம் ஏற்றப்பட்டது. இதையடுத்து, ஹிந்து அமைப்பு தொடர்ந்த அவமதிப்பு வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், உயர் நீதிமன்ற பாதுகாப்பில் இருந்த சிஐஎஸ்எஃப் வீரர்கள் பாதுகாப்பில் மனுதாரரை தீபம் ஏற்ற மீண்டும் உத்தரவிட்டார்.

இதனிடையே, திருப்பரங்குன்றம் பகுதியில் சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்படும் என தெரிவித்த காவல்துறையினர் தீபம் ஏற்ற அனுமதி கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டனர்.

இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் நிலையில், சட்டம் - ஒழுங்கு பிரச்னையை ஏற்படுத்தும் வகையில் நீதிபதி சுவாமிநாதன் சர்ச்சைதீர்ப்பை வழங்கியதாக தமிழக அரசு குற்றம்சாட்டி இருந்தது.

இந்த நிலையில், இன்றைய மக்களவை கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, ஓம் பிர்லாவை அவரது அறையில் சந்தித்த இந்தியா கூட்டணி எம்பிக்கள், நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்க தீர்மான நோட்டீஸை அவரிடம் வழங்கினர்.

அப்போது, திமுக மூத்த தலைவர்கள் கனிமொழி, டி.ஆர்.பாலுவுடன், சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் உடனிருந்தனர்.

திமுக, காங்கிரஸ், சமாஜவாதி உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 100 மக்களவை எம்பிக்கள், 50 மாநிலங்களவை எம்பிக்கள் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

# விமானங்கள் ரத்தால் பயணிகள் கடும் அவதி





**டெல்லி,டிச,10:** விமான விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை தவிர்க்க டெல்லி ஐகோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் விமான நிறுவனங்களுக்கு சிவில் விமான போக்குவரத்து துறை புதிய விதிகளை வகுத்தது. புதிய விதிகளை அமல்படுத்த 2 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால், சிவில் விமான போக்குவரத்து துறை வகுத்த புதிய விதிகளை இண்டிகோ அமல்படுத்தவில்லை.

குறிப்பாக, குறைவான விமானிகள், பணியாளர்களுடன் சேவையை தொடர்ந்தது. இதனால், கடந்த 1ம் தேதி முதல் இண்டிகோ விமான சேவை கடும் பாதிப்பை சந்தித்து வருகிறது. போதிய விமானிகள் இல்லாத காரணத்தால் இண்டிகோ நிறுவனத்தின் உள்நாட்டு விமான சேவை பல ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இன்று ஒரேநாளில் 450 இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சென்னை, மும்பை, டெல்லி, பெங்களூரு என பல்வேறு நகரங்களுக்கான இண்டிகோ விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர். அதேவேளை, இண்டிகோ விமான சேவை இன்னும் ஓரிரு நாட்களில் இயல்புநிலைக்கு திரும்பும் என்று விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அண்ணாமலையை சந்தித்தது ஏன்?



**கோயம்புத்தூர்,டிச,10:** தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

கூட்டணி, பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, கட்சி கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

தேர்தலில் அதிமுக, பாஜக கூட்டணி அமைத்துள்ளன. அதேவேளை, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து டிடிவி தினகரன் தலைமையிலான அமமுக கடந்த செப்டம்பர் மாதம் விலகியது. இதனிடையே, டிடிவி தினகரன் நேற்று கோவையில் உள்ள அண்ணாமலை வீட்டிற்கு சென்றார். அங்கு இருவரும் ஒருமணி நேரத்திற்கு மேல் ஆலோசனை நடத்தினர். இதனை தொடர்ந்து அண்ணாமலை நேற்று இரவே டெல்லி புறப்பட்டு சென்றார்.

இந்நிலையில், டிடிவி தினகரன் கோவையில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அண்ணாமலையை சந்தித்தது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த டிடிவி தினகரன் கூறுகையில்,

கூட்டணி குறித்து முடிவு செய்ய இன்னும் காலம் உள்ளது. அமமுகவை தவிர்த்துவிட்டு எந்த கூட்டணியும் ஆட்சி அமைக்க முடியாது. அமமுக இடம்பெறும் கூட்டணிதான் வெற்றிபெறும் , ஆட்சி அமைக்கும் கூட்டணியாக இருக்கும். கூட்டணி குறித்து பொறுத்திருந்து முடிவு எடுப்போம். அண்ணாமலை எனது நெருங்கிய நண்பர். நேற்றைய சந்திப்பு நட்பு ரீதியிலானது. அந்த சந்திப்பில் அரசியல் இல்லை. விலைபோகாத தொண்டர்கள் என்னுடன் பயணிக்கின்றனர்.

# என் பெயரையோ, படத்தையோ அன்புமணி பயன்படுத்த கூடாது: ராமதாஸ்

**திண்டிவனம்,டிச,10:**



பா.ம.க.வில் ராமதாசுக்கும், அவரது மகன் அன்புமணிக்கும் கருத்து மோதல் நீடித்து வருகிறது. கட்சிக்கு சொந்தம் கொண்டாடி இருவரும் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டனர். ஆனால் தேர்தல் ஆணையம் 2026 ஆகஸ்டு மாதம் வரை அன்புமணி தான் பா.ம.க. தலைவர் என கூறியது. தேர்தல் ஆணையத்தை கண்டித்து ராமதாஸ் தரப்பிரனர் டெல்லி தேர்தல் ஆணையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மேலும் கோர்ட்டிலும் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த நிலையில் திண்டிவனம், தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவன தலைவர் ராமதாஸ் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

கட்சிக்காக நான் உழைத்ததை எத்தனை முறை சொல்லி காட்ட வேண்டியுள்ளது. தேர்தல் ஆணையத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்து உள்ளோம். இதில் சம்பந்தமே இல்லாமல் பொய்மூட்டைகளுடன் அன்புமணி தரப்பு நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளது.

கட்சி எங்களுக்கே என்று சொல்ல எனக்கு வெட்கமாக உள்ளது. கட்சி எங்களுக்கு இல்லை சொல்ல எனக்கு ஒரு பிள்ளை. தேவையென்றால் அன்புமணி தனிக்கட்சி தொடங்கி கொள்ளட்டும். இனி என் பெயரையோ, படத்தையோ அன்புமணி பயன்படுத்த கூடாது. அதற்கு அவருக்கு உரிமை இல்லை. என் வீட்டில் ஒட்டு கேட்பு கருவி வைத்தது தொடர்பாக புகார் அளித்து எந்த வித நடவடிக்கையும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு அதிகாரிகளை நியமிக்க அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவு

**புதுடெல்லி,டிச,10:**



மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை மத்திய உள்துறை அமைச்சகம் நடத்த உள்ளது. இப்பணி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2 கட்டங்களாக தொடங்கும் என்று பாராளுமன்றத்தில் கடந்த 2-ந்தேதி மத்திய அரசு தெரிவித்தது. 2026-ம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரைமாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் வசதிக்கு ஏற்ப 30 நாட்களுக்குள் வீடுகள் கணக்கெடுப்பு நடத்தப்படும். இரண்டாம் கட்டமாக 2027-ம் ஆண்டு மார்ச் 1-ந் தேதி முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிக்கு அதிகாரிகளை வருகிற ஜனவரி 15-ந்தேதிக்குள் நியமிக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இந்தியப் பதிவாளர் ஜெனரல் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிக்கான அதிகாரிகள் நியமனத்தை 2026-ம் ஆண்டு ஜனவரி 15-ந்தேதி முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. சுமார் 700 முதல் 800 பேர்களுக்கு ஒரு கணக்கெடுப்பாளருக்குப் பணி ஒதுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு 6 கணக்கெடுப்பாளர்களுக்கும் ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்பட வேண்டும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு விதிகள்-1990-ன் விதி 3-ன் படி, ஆசிரியர்கள், எழுத்தர்கள் அல்லது மாநில அரசு மற்றும் உள்ளூர் அதிகார சபையின் எந்தவொரு அதிகாரியும் கணக்கெடுப்பாளராக நியமிக்கப்படலாம். கணக்கெடுப்பாளரை விட உயர்ந்த பதவியில் உள்ள அதிகாரிகள் மேற்பார்வையாளராக நியமிக்க வேண்டும். ஜனவரி 15-ந்தேதிக்குள் மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகளை நியமிப்பதை உறுதி செய்ய மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கொடுக்காத மத்திய அரசு- விஜய்

**புதுச்சேரி,டிச,10:**



புதுச்சேரி உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் மத்திய அரசை விமர்சித்து த.வெ.க. தலைவர் விஜய் பேசியதாவது:-

* புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கேட்டு பல முறை சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

* 16 முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும் புதுச்சேரிக்கு இன்னும் மாநில அந்தஸ்தை மத்திய அரசு கொடுக்கவே இல்லை.

* புதுச்சேரியில் ஒரு ஐ.டி. கம்பெனி உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை.

* காரைக்கால், ஏனாம், மாஹேவில் முன்னேற்றம் இல்லை, சுற்றுலா தளமான புதுவையில் பார்க்கிங் வசதி இல்லை.

* ஒரு அமைச்சர் ஊழல் புகாரில் சிக்கி நீக்கப்பட்டு வேறு அமைச்சர் நியமிக்கப்பட்டு 200 நாள் ஆகியும் பதவி தரப்படவில்லை.

* 20 லட்சம் பேர் வாழும் புதுச்சேரி மத்திய நிதி குழுவில் இடம்பெறவில்லை.

* புதுச்சேரிக்கு போதிய நிதி வரத்து இல்லாததால் வெளியில் இருந்து கடன் வாங்க வேண்டி உள்ளது.

* புதுச்சேரி கடனை குறைத்து பொருளாதாரத்தை வளர்க்க போதிய திட்டங்கள் வகுக்க வேண்டும்.

*இந்திய அளவில் ரேசன் கடைகளே இல்லாத மாநிலமாக புதுச்சேரி உள்ளது.

*மற்ற மாநிலம் போல அரிசி, பருப்பு வழங்கும் முறையை புதுச்சேரியில் சீராக்க வேண்டும்.

*வரும் புதுச்சேரி தேர்தலிலும் த.வெ.க.வின் கொடி பட்டொளி வீசி பறக்கும்.

*நம்பிக்கையுடன் இருங்கள், வெற்றி நிச்சயம் என்றார்.

## புதுச்சேரி அரசை பார்த்து தி.மு.க. அரசு கற்றுக் கொள்ள வேண்டும்

* புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் வணக்கம். எல்லாரும் எப்படி இருக்கீங்க?

* மத்திய அரசுக்குத்தான் தமிழ்நாடு தனி, பாண்டிச்சேரி தனி. ஆனால் நமக்கு அந்த வேறுபாடு கிடையாது. நாம் ஒன்று தான்.

* தமிழ்நாடு, புதுச்சேரி வேறுவேறு என பிரித்தாலும் நாமெல்லாம் வேறு வேறு கிடையாது.. நாமெல்லாம் ஒன்று தான், சொந்தம் தான்.

* உலகத்தில் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும் அவர்கள் நம் உயிர் தான். பாச உணர்வு இருந்தால் போதும் வேறு எதுவும் தேவையில்லை.

* மகாகவி பாரதியார் இருந்த மண், பாரதிதாசன் பிறந்தமண் போன்ற சிறப்புகளை பெற்றது புதுச்சேரி.

* நமக்காக வந்தவர் எம்.ஜி.ஆர். அவரை மிஸ் செய்து விடாதீர்கள் என நம்மை அலர்ட் செய்தது புதுச்சேரிதான்.

* தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு முன்பாகவே புதுச்சேரியில் ஆட்சி அமைத்தார் எம்.ஜி.ஆர்.

* இந்த விஜய் தமிழ்நாட்டிற்கு மட்டும்தான் குரல் கொடுப்பார் என்று நினைக்காதீர்கள். புதுச்சேரிக்கும் சேர்த்து குரல் கொடுப்பேன், இது என் கடமை.

* தமிழ்நாடு போலவே புதுச்சேரி மக்களும் 30 ஆண்டுகளாக என்னை தாங்கி பிடித்துள்ளார்கள்.

* புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமிக்கு மனப்பூர்வ நன்றி. வேறு ஒரு கட்சியின் நிகழ்ச்சிக்கு பாரபட்சம் காட்டவில்லை. இதை பார்த்தாவது திமுக அரசு கற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

# சென்னை வானகரத்தில் இன்று நடைபெறும் அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்துக்கு பிரமாண்ட ஏற்பாடுகள்

தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னையில் நாளை நடைபெறும் அ.தி.மு.க. பொதுக்குழு- செயற்குழு கூட்டத்தில் பங்கேற்கிறார். இதற்காக பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் இன்று காலை 10 மணி அளவில் வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்கிறார்கள்.


மண்டபத்தின் நுழைவு வாயில் அருகே உள்ள காலி மைதானத்தில் உணவு தயாரிப்பு கூடம், உணவு அருந்தும் கூடம், வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எல்.இ.டி திரைகள் அமைக்கும் பணிகள் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான பா.பென்ஜமின் தலைமையில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதனிடையே இந்த பணியை தலைமை கழக மேலாளர் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.பி. முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, டாக்டர் சி.விஜயபாஸ்கர் ஆகியோர் அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வந்து செல்லும் பாதை கழக நிர்வாகிகள் உணவருந்தும் இடம் உணவு தயாரிப்பு கூடம் பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள் அமருமிடம் ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் நடைபெற உள்ள இந்த பொதுக்குழு கூட்டம் அரசியல் களத்தில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# கார்த்திகை மாதம் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு





**பொள்ளாச்சி, டிச.10:**

பொள்ளாச்சி வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் விநாயகருக்கு கார்த்திகை மாதம் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு அபிஷேகங்கள் பால், தயிர், பன்னீர்,இளநீர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், அருகம்புல் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, ராஜ அலங்காரத்தில் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, மங்கள வாத்தியம் இசைக்க பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் விநாயகரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# கார்த்திகை மாதம் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை, டிச.10:**



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ விநாயகருக்கு டிசம்பர் -9 கார்த்திகை மாதம் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு அபிஷேகங்கள் பால், தயிர், பன்னீர்,இளநீர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், அருகம்புல் மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் விநாயகரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# திருப்பூரில் அங்கன்வாடி ஊழியர்கள் சாலைமறியல்- 100 பேர் கைது

**திருப்பூர், டிச.10:**





தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் சங்கம் சார்பில் 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு அங்கன்வாடி ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 1993ம் ஆண்டு பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டும், பணி ஓய்வு பெறும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி பணிக்கொடை வழங்க வேண்டும், மேலும் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அகவிலைபடியுடன் கூடிய ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பள்ளிகளை போல மே மாதம் முழுவதும் அங்கன்வாடிகளுக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.தொடர்ந்து கோரிக்கை களை வலியுறுத்தி கோஷம் எழுப்பியப்படி திருப்பூர் பல்லடம் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து உடனடியாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் அவர்களிடம்பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் மறியலை கைவிட மறுத்ததை தொடர்ந்து, மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர். அப்போது போலீசாருடன் லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இருப்பினும் போலீசார் அனைவரையும் கைது செய்தனர்.

# சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்து- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, டிச.10:**



காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி நேற்று தனது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், தி.மு.க. தலைவரும்,முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள பதிவில்,

காங்கிரஸ் பாராளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

அவரது வாழ்க்கை தியாகம், தன்னலமற்ற பொதுப் பயணம், மதச்சார்ப்பின்மை மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கான உறுதியான உறுதியை பிரதிபலிக்கிறது.

சோனியா காந்திக்கான கொள்கை பாதை இந்தியாவிற்கான நமது கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தட்டும் என்று கூறியுள்ளார்.

# த.வெ.க. தலைவர் விஜயை பாராட்டிய சீமான்

**புதுச்சேரி, டிச.10:**



புதுச்சேரி உப்பளம் மைதானத்தில் நடத்த பொதுக்கூட்டத்தில் பேசிய த.வெ.க. தலைவர் விஜய், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கேட்டு பல முறை சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்துக்கொண்டே இருக்கிறார்கள். 16 முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும் புதுச்சேரிக்கு இன்னும் மாநில அந்தஸ்தை மத்திய அரசு கொடுக்கவே இல்லை என்று கூறி இருந்தார்.

இந்நிலையில் சென்னை புழலில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பேட்டி அளித்தார். அப்போது த.வெ.க. தலைவர் விஜய்க்கு சீமான் பாராட்டு தெரிவித்தார். அவர் கூறியதாவது:

* புதுச்சேரி மாநில அந்தஸ்து குறித்து த.வெ.க. தலைவர் விஜய் பேசியிருப்பது மகிழ்ச்சி.

* த.வெ.க. தலைவர் விஜய்க்கு முன்னதாக புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரியது நான்தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அறிவுசார் மையம் கட்ட அடிக்கல் நாட்டும் விழா



**திருவண்ணாமலை, டிச.10:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் தொகுதி நாடழகானந்தல் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் கிராம அறிவுசார் மையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். உடன் ஆரஞ்சி ஆறுமுகம் அவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை**

# A.D.ஜெயவீரபாண்டியனார் பிறந்த தினம்

**நாகப்பட்டினம், டிச.10:** நாகப்பட்டினம் ADJ கல்வி நிறுவனங்களின் நிறுவனர் பெரிய அண்ணாச்சி என்று எல்லோரும் போற்றி வணங்கும் அமரர் வித்யாசேவா ரெத்தினம் உயர்திரு A.D.ஜெயவீரபாண்டியனார் அவர்களின் பிறந்த தினம் நடராஜன் தமயந்தி மேல் நிலைப் பள்ளியில் 09:12:2025 அன்று மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

1955 முதல் நாகப்பட்டினத்தில் கல்வி நிறுவனங்களை துவங்கி இன்றளவும் பெண் குழந்தைகள் கல்வி கற்க LKG துவங்கி கல்லூரியில் முனைவர் பட்டம் வரை பெற்று நாகை பகுதி மக்கள் அனைவரும் கல்வியின் வாயிலாக சமூக, பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைவதற்கு ADJ கல்வி நிறுவனங்கள் எட்டும் கல்வி எட்டாக்கனி அல்ல அது அனைவருக்கும் எட்டும் வகையில் செய்து கல்வி பயில உறுதுணையாக உள்ளது.




அண்ணாச்சியின் பிறந்த நாளில் நடராஜன் தமயந்தி மேல் நிலைப் பள்ளியில் அண்ணாச்சியின் திருவுருவம் படத்திற்கு விளக்கேற்றி மலர்மாலைகளால் அலங்கரித்து மலர் தூவி வழிபட்டனர். மாணவர்கள் அனைவரும் நன்றாக பயில்வோம் என உறுதி மொழி எடுத்தனர். பள்ளியில் பயிலும் மாணவர்கள் (2000) அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

பிரதான முகப்பில் மலர்ச் செடிகள் நடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ- மாணவிகள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.

## பரமக்குடியில்

# 63 நாயன்மார்களுக்கு சிறப்பு வழிபாடு திருவாசகம் முற்றோதல் விழா



**பரமக்குடி, டிச.10:** ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி விசாலாட்சி அம்பிகா சந்தி ரசேகர சுவாமி (ஈஸ்வ ரன்) கோவில் உள்ளது. இங்கு சிவகாமசுந்தரி நடராஜர் தனிச் சன்னதியில் அருள்பாலிக்கிறார். 63 நாயன்மார்கள் சன்னதியும் உள்ளது. அறுபத்து மூவருக் கும் பல்வேறு வகை யான திரவியங்களால் அபிஷேகம் செய்யப் பட்டது. தீப விளக்குகள் ஏற்றப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் ருத் ராட்சை, மலர்களால் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காண்பிக் கப்பட்டது.


சேமலும் சிவனடியார் கள் திரளாக திருவாசகம் முற்றோதல் செய்தனர். அப்போது விசாலாட்சி அம்பிகா சந்திரசேகர சுவாமி ரிஷப வாக னத்தில் வீற்றிருந்தார். ஏராளமானவர்கள் தரிசித்தனர். அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருவண்ணாமலையில் 14-ந்தேதி தி.மு.க. இளைஞரணி மாநாடு

**சென்னை, டிச.10:** தி.மு.க. தலைவர் முதலமைச் சர் மு.க.ஸ்டாலின், அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டசபை பொதுத்தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி இலக்கை முன் வைத்து வியூகம் வகுத்து செயல்படுகிறார்.

தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க.வில் வாக்குச்சாவடி முகவர்களை முழுமையாக நியமித்து அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி உள்ளார். இப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெறுவதால் அதில் விடுபடும் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார்.

அதுமட்டுமின்றி என் வாக்குச்சாவடி-வெற்றி வாக்குச்சாவடி என்று அறிவித்து கடுமையாக உழைக்க வேண்டும் என்று தி.மு.க.வினருக்கு கட்டளையிட்டுள்ளார். ஒவ்வொரு வீடுகளுக்கும்



சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறி உள்ளார்.

அவ்வாறு வீடு வீடாக செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் கட்டாயம் மகளிர் இடம் பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

இதன் அடிப்படையில் கட்சி நிர்வாகிகள் இப்போது வீடு வீடாக சென்று தி.மு.க.வின் சாதனைகளை எடுத்து சொல்லி வருகிறார்கள்.

இந்த நிலையில் தி.மு.க.வின் இளைஞரணி மாநாட்டை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருவண்ணாமலையில் வருகிற 14-ந்தேதி நடத்துகிறார்.

தேர்தலுக்கு முன்னோட்டமாக நடத்தப்படும் இந்த மண்டல மாநாட்டில் வட மாவட்டங்களில் உள்ள 91 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 1 லட்சத்து 30 ஆயிரம் இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்க இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளார். அப்போது சட்டசபை தேர்தல் தொடர்பாக கட்சியினருக்கு முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார் என தெரிகிறது.

தி.மு.க. கூட்டணிக்கு மேலும் 2 கட்சிகள் வரும் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில் அதையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெளிவுபடுத்துவார் என தெரிகிறது.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இடம் பெற்றிருந்தாலும், த.வெ.க. கட்சியுடன் காங்கிரஸ் ரகசியமாக பேசி வருவது பற்றியும் இந்த மாநாட்டில் அவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவார் என தெரிகிறது.

# தகுதியான 55 ஆயிரம் பேர்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள் விரைவில் கிடைக்க ஏற்பாடு

**சென்னை, டிச.10:** தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக உங்களுடன் ஸ்டாலின் முகாம் மூலம் ஏராளமான மனுக்கள் பெறப்பட்டது. அதில் புதிய ரேஷன் கார்டுகள் கேட்டு பொதுமக்கள் பலர் விண்ணப்பித்தனர்.


அந்த மனுக்கள் மீது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதில் விண்ணப்பித்த தகுதியான அனைவருக்கும் விரைவில் ரேசன் அட்டைகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இதன் மூலம் தகுதியான சுமார் 55 ஆயிரம் நபர்களுக்கு விரைவில் முழுமையாக ரேஷன் அட்டைகள் விநியோகிக்கப்பட உள்ளது. புதிய ரேஷன் அட்டை கோரிய 1,07,910 விண்ணப்பங்கள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளதாகவும் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

சில மாதங்களாக ரேஷன் கார்டு அச்சிடுவதில் தாமதம் ஏற்படுகிறது என பொதுமக்கள் புகார் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் மீண்டும் ரேஷன் அட்டை விநியோகிக்கும் பணி விரைவாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# சத்திய நாராயணர் பூஜை சிறப்பு வழிபாடு









**திருத்தணி, டிச.10:** வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கார்த்திகை மாத பௌர்ணமியை முன்னிட்டு நெல்லி செடிக்கும், துளசி செடிக்கும் திருமணம் நடைபெற்றது. திருஞானசம்பந்தம் ஐயர் அவர்களால் கலசங்கள் வைத்து ஹோமங்கள் செய்து, ஸ்ரீ சத்திய நாராயணயர் சாமி படம் வைத்து 25 தம்பதிகள் பூஜைகள் செய்தனர்.


வேத மந்திரங்கள் ஒலிக்க, ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பாட்டுககள் பாடி, மங்கள வாத்தியம் இசைக்க, வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, துளசி மாலைகளால் அலங்கரித்து, கோடி ஜஞ்ஜம்,வஸ்திரங்கள் வைத்து, தோரணங்கள் அமைத்து, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன், மகா தீபாரதனை நடைபெற்றது. அனைவருக்கும் மஞ்சள் குங்குமத்துடன் தாம்பூலங்களும் வழங்கப்பட்டது. பூஜையை ஏற்பாடு செய்தவர்கள் பிரபாகர் சங்கரி அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது. ஆர்ய வைஸ்ய மகா சபா சார்பில் ஸ்ரீ சத்யநாராயணர் பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது.


# புவனேஸ்வரருக்கு அபிஷேகங்கள்











அருள்மிகு புவனேஸ்வரி உடனுறை புவனேஸ்வரருக்கு 4 வது சோமவாரத்தை முன்னிட்டு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், வெட்டிவேர், தேன், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம், வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் செய்யப்பட்டது. 108 சங்குகள் வைத்து அபிஷேகங்கள், ஹோமம் வளர்த்து சுவாமிக்கு சங்காபிஷேகம் நடைபெற்றது. மூலவர்க்கும், சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு விநாயகருக்கும், அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், சங்குகள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க,மங்கள வாத்தியங்கள் இசைக்க,பிரசாத நெய்வேத்தியங்களுடன் மகாதீபாரதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர்.


## சோனியா காந்தி பிறந்த நாள் காங்கிரஸ் சார்பில்

# யோக விநாயகர் கோவில் சிறப்பு பூஜை



**சிவகங்கை, டிச 10:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சிவகங்கை ரோட்டில் காந்தி சிலை முன்பு உள்ள அருள்மிகு ஶ்ரீ யோக விநாயகர் கோவிலில் காங்கிரஸ் கமிட்டி மூத்த தலைவர் சோனியாகாந்தி 79 வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு யோக விநாயகர் கோவில் 48 வது மண்டல பூஜைக்காக ரூ 25001 ஐ சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் சார்பில் சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சை வழங்கினார். இதில் நகர் தலைவர் நகராட்சி கவுன்சிலர் புருஷோத்தமன், மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# இரட்டை ஆஞ்சநேயருக்கு வெண்ணை காப்பு



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி இருக்கும் அருள்மிகு வரதராஜபெருமாள் கோயிலில் எழுந்தருளியுள்ள அருள்மிகு இரட்டை ஆஞ்சநேயருக்கு வெண்ணை காப்பு நடைபெற்றது. பக்தர்களுக்கு தீர்த்தம் சடாரி துளசி மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

# இளையான்குடியில் உலக மாற்றுத்திறனாளி தினம்

மானாமதுரை டிச 10: சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பகுதியில் உலக மாற்றுத் திறனாளிகள் தினம் கொண்டாடப்பட்டது சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் ஏற்பாட்டில் 100 மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு கேக் வெட்டி சுவையான உணவு வழங்கப்பட்டு இந்நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் டாக்டர் பிஸ்மில்லா கனி பொதுநல மருத்துவர் தலைமையில் மண்டல வட்டாட்சியர் சகாயமேரி முன்னிலையில் நடைபெற்றது மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்பர் சங்கம் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் இந்நிகழ்வில் சிறப்பாக ஏற்பாடு செய்து





மாற்று திறனாளிகளுக்கு உணவு வழங்கிய இளையான்குடி சமூக ஆர்வலர் அப்துல் மாலிக்




அவர்களுக்கு மாற்றுத்திறனாளி சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவிக்கப்பட்டது.

# தியாக தலைவி சோனியா காந்தி; செல்வப்பெருந்தகை பிறந்தநாள் வாழ்த்து

**சென்னை, டிச.10:** காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி. தனது 79வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதையொட்டி சோனியா காந்திக்கு அரசியல் தலைவர்கள், கட்சி தொண்டர்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், சோனியா காந்திக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செல்வப்பெருந்தகை வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

தேசத்தின் ஒற்றுமை, பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமூக நீதி குறித்து இடைவிடாத அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் தியாக தலைவி சோனியா காந்தி பிறந்த தினமான இன்று அவருக்கு எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூய்மை பணியாளர்களை பணி செய்யவிடாமல் தடுத்தால் புகார் தெரிவிக்கலாம்: சென்னை மாநகராட்சி



**சென்னை, டிச.10:** பணி நிரந்தம் செய்ய வலியுறுத்தி அம்பத்தூர் மண்டலத்தில் 300-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் தூய்மை பணியாளர்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது. தூய்மை பணியாளர்களின் போராட்டம் காரணமாக அம்பத்தூர் மண்டலத்தில் குப்பை அள்ளும் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் வேறு மண்டலத்தில் இருந்து தூய்மை பணியாளர்களை அழைத்து வந்து தூய்மை பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, வெளி மண்டலத்தில் இருந்து வரும் தூய்மை பணியாளர்களை சிலர் பணி செய்ய விடாமல் தடுப்பதாக சென்னை மாநகராட்சிக்கு புகார் வந்தது.

இது குறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலத்தில் 1,457 தற்காலிக தூய்மை பணியாளர்கள் கடந்த 3 நாட்களாக பணிக்கு வராமல் போராட்டம் செய்து வருகின்றனர். இதற்கிடையே, தூய்மை பணியாளர்கள் சீருடை அணிந்து பணிக்கு வரும் போது 3-ம் நபர் யாரேனும் தடுக்க முயன்றாலோ, பணியை செய்ய விடாமல் தடுத்தாலோ உடனே 9445190097 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிப்பவரின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 61 காலிப்பணியிடங்களை நிரப்ப டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு வெளியீடு

**சென்னை, டிச.10:** அரசு உதவி வழக்கு நடத்துநர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது.




தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை டிஎன்பிஎஸ்சி எனப்படும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணையம் நிரப்பி வருகிறது. அந்த வகையில், தற்போது அரசு உதவி வழக்கு நடத்துநர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதன் விவரங்கள் வருமாறு:

தேர்வு நடத்தும் நிறுவனம்: தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி)

பணி நிறுவனம்: தமிழ்நாடு மின் விநியோக நிறுவனம் லிமிடெட்

காலி இடம்: 61

பதவி: அரசு உதவி வழக்கு நடத்துநர் (நிலை - 2)

கல்வி தகுதி: பி.எல். பட்டம் பெற்றிருக்க வேண்டும். வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். குற்றவியல் நீதிமன்றங்களில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.

வயது: பிரிவுகளுக்கு ஏற்ப வயது வரம்பு மாறுபடும்.

தேர்வு முறை: தமிழ் தகுதித் தேர்வு, முதல் நிலைத்தேர்வு, மெயின் தேர்வு, ஆவண சரிபார்ப்பு.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 31-12-2025.

இணையதள முகவரி: https://tnpsc.gov.in/

## செல்போனில் காதலி சண்டை...

# விரக்தியில் நீட் தேர்வு பயிற்சி மாணவர் எடுத்த விபரீத முடிவு

**சென்னை, டிச.10:** ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர் ஆருண் பாஷா(வயது 22). பார்மசியில் டிப்ளமோ முடித்துவிட்டு 'நீட்' தேர்வுக்காக அவரது அண்ணனுடன், சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் கோகுல் நகர் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் தங்கி படித்து வந்தார்.


நேற்று அதிகாலை 2 மணி அளவில் ஆருண் பாஷா, தனது காதலியுடன் செல்போனில் பேசிக்கொண்டிருந்தார். திடீரென அவர், தனது கை மணிக்கட்டு பகுதியில் அறுத்துக்கொண்டு, அந்த அடுக்குமாடி குடியிருப்பின் 3-வது மாடியில் இருந்து கீழே குதித்தார். இதில் படுகாயமடைந்த அவரை மீட்டு சிகிச்சைக்காக தாம்பரத்தில் உள்ள மாவட்ட அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ஆருண்பாஷா பரிதாபமாக இறந்தார்.

இதுபற்றி தகவல் அறிந்துவந்த தாம்பரம் போலீசார், ஆருண் பாஷா உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

தற்கொலை செய்துகொண்ட ஆருண்பாஷா, ஏற்கனவே கோவையில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் 'நீட்' தேர்வுக்காக படித்து கொண்டிருந்தார். அப்போது இளம்பெண் ஒருவருடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. பின்னர் இருவரும் 2 வருடமாக காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த ஒரு வாரமாக இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு வந்துள்ளது. சம்பவத்தன்று இரவு முதல் அதிகாலை வரை ஆருண் பாஷாவுடன் அவரது காதலி செல்போனில் பேசி சண்டையிட்டதாகவும், இதனால் விரக்தி அடைந்த அவர், கையை அறுத்துக்கொண்டதுடன், மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதும் விசாரணையில் தெரியவந்ததாக போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னையில் கார் மோதி போக்குவரத்து காவலர் உயிரிழப்பு



**சென்னை, டிச.10:** சென்னை பள்ளிகரணை அருகே வாகனத் தணிக்கையின் போது கார் மோதியதில் போக்குவரத்து முதன்மை காவலர் மேகநாதன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மடிப்பாக்கத்தில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அதிவேகமாக வந்த காரை அவர் மறித்துள்ளார். ஆனால் அந்த கார் நிற்காமல் சென்றுள்ளது.

இதனால் அந்த காரை மேகநாதன் தனது இருசக்கர வாகனத்தில் துரத்தி சென்றுள்ளார். அப்போது சாய்ராம் என்பவர் ஓட்டிய கார் பைக் மீது மோதி மேகநாதன் இழுத்துச் செல்லப்பட்டார். இதனையடுத்து காவலர் மேகநாதன் நிகழ்விடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தொடர்ந்து காவலர் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

மேலும் மதுபோதையில் இருந்த சாய்ராம் என்பவரை போலீசார் கைது செய்தனர். விபத்து தொடர்பாக சென்னை மாநகர காவல்துறை உயரதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இன்ஸ்டாகிராமில் பழகி மாணவியை கர்ப்பமாக்கிய வாலிபர்

**திருப்பூர், டிச.10:** உத்தரபிரதேசத்தை சேர்ந்த தம்பதி திருப்பூரில் தங்கி பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வருகின்றனர். இவர்களது 15 வயது மகள் அரசு பள்ளியில் 9-ம் வகுப்பு படித்து வருகிறாள். இந்த நிலையில் அந்த மாணவிக்கு, திருப்பூர் கொங்கு மெயின் ரோடு பகுதியைச் சேர்ந்த சஞ்சய்குமார் (வயது 19) என்பவருடன் இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் அவர்களுக்குள் காதலாக மாறியது.

இதனால், சஞ்சய்குமார் மாணவியிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்தார். இதனால் மாணவி 3 மாத கர்ப்பமானார். இதுகுறித்து சிறுமியின் தாய் கொங்கு நகர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் சஞ்சய்குமார் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்து தேடி வருகின்றனர்.

# முழு கொள்ளளவை எட்டிய புழல் ஏரி...!

**சென்னை, டிச.10:** நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக சென்னைக்கு குடிநீர் ஆதாரங்களாக விளங்கும் செம்பரம்பாக்கம், புழல், பூண்டி ஆகிய ஏரிகளின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகிறது. இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரிகளில் இருந்து அவ்வப்போது நீர் திறக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சென்னை புழல் ஏரி அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. 3 ஆயிரத்து 300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரி அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.



இதையடுத்து, ஏரியில் இருந்து திறந்து விடப்படும் உபரிநீர் 100 கன அடியில் இருந்து 300 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் கரையோர மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "மறந்து வாழ்... மறந்து வாழ்"

இரவு நெருங்க நெருங்க பயத்தில் உட்கார்ந்திருந்தான் சந்திரன். "கடவுளே... இன்னிக்கு ராத்திரியை எப்படிக் கடக்கப் போகிறேனோ?"

அவன் மனைவி மல்லிகா ஆறு மாதங்களுக்கு முன்னால் விஷக் காய்ச்சலில் மரணித்த பின், அந்த வீட்டில் தனியாக வாழ்ந்து வரும் சந்திரனை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி பலர் வற்புறுத்தியும் மறுத்து விட்டான்.

"மாப்ள... நாங்களே சொல்றோம்... நீங்க வேறொரு பெண்ணைக் கட்டிக்கங்க" என்று மல்லிகாவின் பெற்றோர் கேட்டுக் கொண்டும் அவன் ஏற்கவில்லை.

பல வழிகளில் அவன் மனதை மாற்ற, பலர் முயற்சித்தும் அவன் கடுகளவும் அசையவில்லை.

இரவு. 12.00 மணி. வெளியில் வேகமாய் வீசும் காற்று, வெண்டிலேட்டருக்குள் புகுந்து உள்ளே வரும் போது, மல்லிகாவின் குரலில் "இறந்து வா... இறந்து வா" என்று சந்திரனுக்கு அழைப்பு விடுப்பது போலிருக்க, இரவெல்லாம் தூங்காமலே கிடந்தான்.

"சந்தேகமேயில்லை... மல்லிகாதான் என்னைக் கூப்பிடறா... என்னை மறுமணம் செய்து கொள்ளாமல் தடுத்து தன்னோடு அழைத்துக் கொள்ள விரும்புகிறாள்!... போய் விடுவோமா... போய் விடுவோமா... செத்துப் போயிடலாமா?"

தாறுமாறாய்ச் சிந்தித்தபடி புரண்டு புரண்டு படுத்துக் கிடந்தவன் அவனையுமறியாமல் உறங்கிப் போனான்.

மறுநாள் தன் நிலைமையை அவன் ஊழியன் ராஜாவிடம் சொல்ல, அமைதியாய்க் கேட்டு முடித்த ராஜா, "சரி ஒரு ரெண்டு நாளைக்கு நான் உன் கூட வந்து தங்கறேன்" என்றான். மனதிற்குள், "பாவம்... மனதளவில் ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கான்... இதை சைக்காலஜிகல் முறைலதான் சரி பண்ணனும்" நினைத்துக் கொண்டான்.

இரவு 12.00.

காற்று வீசத் தொடங்கியதும் வெண்டிலேட்டர் வழியே காற்றின் ஓசை விஸிலடிப்பது போல் கேட்டது.

"கேட்குதா... கேட்குதா... மல்லிகா என்னை "இறந்து வா... இறந்து வா"ன்னு கூப்பிடறது கேட்குதா?" பதறினான் சந்திரன்.

அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்த ராஜா, "நீ தப்பா நெனச்சிட்டே... உண்மையில் அந்தக் குரல் என்ன சொல்லுது தெரியுமா?... " இறந்து வா... இறந்து வா"ன்னு சொல்லலை... "மறந்து வாழ்... மறந்து வாழ்"ன்னு சொல்லுது" என்றான்.

"அப்படின்னா?"

"என்னை மறந்திட்டு இன்னொரு பெண்ணைக் கட்டிக்கிட்டு வாழ்... வாழ்"ன்னு சொல்லுது மல்லிகாவோட ஆவி"

"நெஜம்மாவா?"

"நீ சரின்னு சொன்னாத்தான் அவளோட ஆத்மா சாந்தியடையும்... இந்த காற்றோட சத்தமும் நிற்கும்"

ஒரு நெடிய யோசனைக்குப் பின், சம்மதித்தான் சந்திரன்.

மறுநாள் சந்திரன் ஆபீஸிலிருந்து கிளம்பும் முன்னே, அவனிடம் சாவியை வாங்கிக் கொண்டு , அவன் வீட்டிற்கு வந்த ராஜா வெண்டிலேட்டரின் ஓரங்களில் இருந்த துவாரங்களை கெட்டியான அட்டைகளைச் செருகி அடைத்தான்.

அன்று இரவு வெளியில் காற்றடித்தும் வெண்டிலேட்டர் வழியே ஓசை வராததால், மல்லிகாவின் ஆன்மா சாந்தியடைந்து விட்டதாய் நம்பினான் சந்திரன்.

அதே நேரம்,கண்ணை மூடித் தூங்குவது போல் நடித்துக் கொண்டிருந்தான் ராஜா.

**முகில் தினகரன்,**
கோயமுத்தூர்



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*"பாடம் எல்லாம் முடிஞ்சிப் பேச்சு.. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க.. எதுவா இருந்தாலும் தயங்காமக் கேளுங்க.."*
*"சார் உங்க பெண்ணு பேரு என்ன சார்?"*

## பூண்டு நன்மைகள்



1. இரத்த அழுத்த பராமரிப்பு: தற்போது 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் 60 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் சரியான இரத்த அழுத்தத்தை பராமரிக்க மருந்துகளை நாடுகின்றனர். பூண்டு நைட்ரிக் ஆக்சைடு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இரத்த நாளங்களை விரிவுபடுத்துகிறது மற்றும் இரத்த அழுத்தத்தை சீராக மீட்டெடுக்க உதவுகிறது. 2. சரும ஆரோக்கியம்: சருமத் துளைகள் இறந்த செல்கள் மற்றும் பாக்டீரியாக்களால் அடைக்கப்படும்போது முகப்பரு ஏற்படுகிறது. பூண்டில் உள்ள அல்லிசினின் பாக்டீரியா எதிர்ப்பு காரணமாக முகப்பருவிலிருந்து நிவாரணம் தருகிறது. ஆனால். பச்சை பூண்டை நேரடியாக சருமத்தில் தடவுவது நல்லதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 3. கொலஸ்ட்ரால் குறைப்பு: கல்லீரல் கொழுப்பின் களஞ்சியமாகும். கல்லீரலில் உள்ள கொழுப்பின் தொகுப்பைக் குறைப்பதன் மூலம் இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்க உதவுகிறது பூண்டு. 4. நீரிழிவு நோய் பாதுகாப்பு: நீரிழிவு நோயாளிகள் உணவுக்கு முன் பொடி வடிவில் பூண்டை எடுத்துக்கொள்ளும்போது உணவுக்குப் பிறகு இரத்த குளுக்கோஸ் அளவு திடீரென அதிகரிப்பதைக் குறைக்கிறது. மற்றும் வகை 2 நீரிழிவு பாதிப்புள்ளவர்களின் இரத்த சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைக்கவும் உதவுகிறது.






# தினம் ஒரு சமையல்

## இனிப்பு -கோதுமை-பரோட்டா



தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கோதுமை மாவு | - 2 கப் |
| பால் | - 1 கப் |
| சர்க்கரை | - 2 டீஸ்பூன் |
| நெய் அல்லது வெண்ணெய் | - 2 டீஸ்பூன் |
| உப்பு | - 1 தேக்கரண்டி |
| எண்ணெய் | |

செய்முறை:

* கோதுமை மாவு, சர்க்கரை, நெய் அல்லது வெண்ணெய், உப்பு எல்லாம் சேர்த்து சேர்க்கவும்.

* பால் ஊற்றி மென்மையான மாவை சப்பாத்தி அல்லது ரோட்டி மாவ் என கலக்கவும், உங்களுக்கு தேவைப்பட்டால் சிறிது சூடான நீரை சேர்த்து கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் அடிக்கவும். பின்னர் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் ஒதுக்கி வைக்கவும். (மாவு தயாரானதும், 20 நிமிடங்களுக்குப் பிறகு நீங்கள் செய்யலாம்)

* பின்னர் பெரிய சுண்ணாம்பு அளவு பந்துகளை உருவாக்கி, முடிந்தவரை மெல்லியதாக உருட்டவும்.இது ஒரு துண்டுகளாக மாறும்.

* ஒரு முனையை ஒரு மையமாகப் பிடித்து, மற்ற முனையை உருட்டவும். இது ஒரு சக்கரம் போல மாறும்.இது உங்களுக்கு அடுக்குகளைத் தரும்.

* மெதுவாக பராத்தாக்களை ஒரு தடிமனான வட்டத்தில் உருட்டவும் (நீங்கள் ஹோட்டலில் சாப்பிட்டது போல).

* ஒரு வாணலியில் வட்ட மாவை வைக்கவும். சிறிய எண்ணெயைப் பயன்படுத்துங்கள், ஒரு பக்கம் பொன்னிறமாகும்போது, திரும்பி, மறுபுறம் சிறிய எண்ணெயுடன் சமைக்கவும். இருபுறமும் தங்க நிறம் கிடைத்த பிறகு அதை வாணலியில் இருந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

* சட்னியுடன் சூடாக பரிமாறவும்.





# கவிதை அரங்கம்!

தளராத இதயம்
உள்ளவனுக்கு
இவ்வுலகில்
முடியாதது என்று
எதுவுமே இல்லை


நம்மை உடைத்த
நாள்களே
நம்மை உருவாக்கிய
நாள்கள்

நம்பிக்கை
வெற்றியோடு வரும்
ஆனால் வெற்றி
நம்பிக்கை
உள்ளோரிடம்
மட்டுமே வரும்

முயற்சி செய்ய
தயங்காதே
முயலும் போது
முட்களும்
உன்னை முத்தமிடும்



## நம்பிக்கை தத்துவம்




நம்பிக்கை நற்கனவை நனவாக்கிவிடும். அவநம்பிக்கை உன் வாழ்க்கையையே கனவாக்கிவிடும்.....

ஒருவரின் அன்பு பற்றி நீ அறிய வேண்டுமா.. ஒரு முறை பிரிவை சந்தித்து விடு...

பொய்யை அறிந்து கொள்வதை விட உண்மையை அறிந்து கொள்வது இலகு.

தோல்வி ஏற்ப்படின் தோற்று விட்டோமே என்று எண்ணாதே நீ ஒரு நாள் வென்று விடுவாய், ஆனால் நேரத்தை வீணாக்காதே அது உன் தோல்வியை பல மடங்கு அதிகரித்து விடும்.

## பிக்பாஸ் 9ல் இருந்து வெளியேறிய பிரஜன் மொத்தமாக வாங்கிய சம்பளம்... இத்தனை லட்சமா?



விஜய் டிவி, ரியாலிட்டி ஷோக்களுக்கு பெயர் போனது.

இந்த தொலைக்காட்சியில் 100 நாட்கள் என்டர்டெயின்மென்ட் கொடுக்கும் வகையில் ஓடிக் கொண்டிருக்கிறது பிக்பாஸ்.

முதல் சீசன் வெற்றியை தொடர்ந்து அடுத்தடுத்த சீசன்கள் ஒளிபரப்பாகி இப்போது 9வது சீசன் ஒளிபரப்பாகி வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் தொடங்கப்பட்ட நிகழ்ச்சி 50 நாட்களை கடந்து அதிரடி திருப்பங்களுடன் ஓடுகிறது.

கடந்த வாரம் பிக்பாஸ் 9 வீட்டில் இருந்து யாரும் எதிர்ப்பார்க்காத வண்ணம் பிரஜன் வெளியேறினார்.

வீட்டைவிட்டு வெளியே வந்தவர் விஜய் சேதுபதியுடன் செம கலாட்டா செய்திருந்தார். பிக்பாஸ் வீட்டில் வைல்ட் கார்டு என்ட்ரியாக நுழைந்தவர் வீட்டில் 35 நாட்கள் இருந்துள்ளார்.

ஒரு நாளைக்கு ரூ. 30,000 ஆயிரம் சம்பளம் பேசப்பட்டு உள்ளே சென்றவர் ரூ. 10 லட்சம் வரை சம்பளம் பெறுவதாக கூறப்படுகிறது.






ரசிகர்களை கவரும் நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் லேட்டஸ்ட் போட்டோஷூட்..

## படையப்பா என் கதை, நானே தயாரித்தேன், ஐஸ்வர்யா ராய் நடிக்க மறுத்தார்! - பல ரகசியங்களை போட்டுடைத்த ரஜினி

படையப்பா படத்தை பற்றிய பல ரகசியங்களை ரஜினி தற்போது கூறி இருக்கிறார். வரும் டிசம்பர் 12ம் தேதி ரஜினி பிறந்தநாள் ஸ்பெஷலாக படையப்பா ரீரிலீஸ் ஆகிறது. அது பற்றி தற்போது ரஜினி பேட்டி அளித்திருக்கிறார்.

படையப்பா படத்தின் மூலக்கதை என்னுடையது. கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில் வரும் நந்தினி கதாபாத்திரத்தை வைத்து ஒரு படம் எடுக்க வேண்டும் என ஆசைப்பட்டேன். அப்படி யோசித்தது தான் படையப்பா கதை.

முதலில் நீலாம்பரி ரோலில் ஐஸ்வர்யா ராய் தான் சரியாக இருப்பார் என நான் நினைத்தேன். அவருக்காக 3-4 மாசம் சுற்றினோம். நடிக்கிறேன் என அவர் சொல்லவில்லை. பண்றேன் என உறுதியாக சொல்லி இருந்தால் ஒன்று அல்லது இரண்டு வருடம் கூட காத்திருந்திருப்பேன்.

ஐஸ்வர்யா ராய்க்கு நடிக்க விருப்பம் இல்லை என்றதும் ஸ்ரீதேவி, மாதுரி தீக்ஷித் போன்ற பல பெயர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்களிடம் அந்த லுக் இல்லை, ஒரு திமிர், ஆணவம் அவர்களிடம் தெரியவில்லை. அதன் பிறகு தான் ரம்யா கிருஷ்ணன் பெயரை கேஎஸ் ரவிகுமார் சொன்னார்.

"ஆரம்பத்தில் எனக்கு சரி என தோன்றவில்லை. ரம்யா கிருஷ்ணன் இன்னும் கொஞ்சம் எடை அதிகரித்தால் நிச்சயம் செட் ஆகும் என இயக்குனர் கூறினார். நீங்கள் உறுதியாக இருந்தால் ஓகே என கூறிவிட்டேன்" எனவும் ரஜினி கூறி இருக்கிறார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, Web: www.paperboy.biz